பக்கங்கள்:-14

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 12 | வெள்ளிக்கிழமை | 27.12.2024 | அதிர்வு 147

## திருகோணமலைக் கடலில் ஆளில்லா விமானம் மீட்பு



(கனகராசா சரவணன்)

திருகோணமலை கடலில் மிதந்த சிறிய ரக ஆளில்லா விமானம் 05

# கிளிநொச்சி நகரில் 36 வீதமான காணிகள் இராணுவத்தினர் வசம்

## விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழரசு எம்.பி. சிறீதரன் கோரிக்கை



(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத் திட்டமிடலுக்குரிய காணிகளில் 36 வீதமானமை போர் முடிவுற்ற 14 ஆண்டுகளின் பின்னரும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமலுள்ளதனால் மாவட்டத்தின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இதனைச் சுட்டிக்காட்டினார். 05

# சீனாவுடன் பேசவுள்ள விடயங்களை அநுர தெளிவுபடுத்த வேண்டுமாம்

## இப்படிக் கோருகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

சீன விஜயத்தின்போது அந்நாட்டுடன் பேச்சு நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள விடயங்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலிறுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுர, ஜனவரி முற்பகுதியில் பீஜிங் செல்லவுள்ள நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரானமுன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“இந்தியா எமது அயல் நாடு. 05






19 வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்மஸ் தினத்தில் மட்டக்களப்பில் தேவாலயத்தில் ஆராதனையில் பங்குபற்றிக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொல்லப்பட்ட விவகாரம் நேற்று முன்தினம் அவரது நினைவு தினத்தை ஒட்டி மீண்டும் கிளறப்பட்டிருக்கின்றது.

அவரின் 19ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த பேரணியை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துரைத்த சாணக்கியன் இந்த விடயத்தை ஒட்டி சில தகவல்களை முன்வைத்திருக்கின்றார். அவை கவனிப்புக்குரியவை.

அந்தச் சர்ச்சைக்குரிய கருத்துக்களின் நடுவே கூறப்படுகின்ற விடயங்களை நீதி நேர்மையோடு விசாரணை செய்து, உண்மைகளை வெளிக்கொண்டு வரும் நெஞ்சுரம் அநுரகுமார திஸநாயக்கா தலைமையிலான புதிய அரசுக்கு உண்டா என்பதே இப்பொழுதுள்ள கேள்வி.

சாணக்கியன் தெரிவித்த கருத்துக்கள் இவை தான்:– 05

# மருந்துகளின் தர பரிசோதனையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை



மருந்துகள் தொடர்பில் தற்போது மேற்கொள்ளப் பட்டு வரும் தரநிலை பரிசோதனைகளை மேலும் அதி கரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தேசிய ஒளட தங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள் ளது.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து ரைக்கும் போதே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதி காரசபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது இறக்குமதி செய்யப்படும் மருந்து களின் தரத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அஸ்வெசும நிலுவைத் தொகையை வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை




அஸ்வெசும நலன்புரி பயனாளர்களுக்கு இதுவரையில் செலுத்தப்படாத நிலுவைத் தொகையை அவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜே ரத்ன தெரிவித்துள்ளார்.

நலன்புரி நன்மைகள் சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் முதலாம் கட்டத்தில் தகுதிபெற்ற இரண்டு லட்சத்து 12, 423 குடும்பங்களுக் கான நிலுவைத் தொகை, இன்று வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரி வித்துள்ளது.

# மாலபே நெவில் பெர்ணான்டோ வைத்தியசாலை அபிவிருத்தி செய்வதற்குத் துரித நடவடிக்கை

## நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

மாலபேயில் உள்ள வைத்தியர் நெவில் பெர்ணான்டோ வைத்திய சாலையைத் தரமான வைத்தியசாலையாக உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலைக்கு நேற்று களவிஜயத்தை மேற்கொண்ட பின்னர் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, சுகாதார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் வைத்தியசாலையொன்றுக்கு மேற்கொண்ட முதலாவது கள விஜயம் இதுவாகும்.

இதன்போது, அமைச்சர் வைத்தியசாலையின் சகல பிரிவுகளையும் பார்வையிட்டதுடன், எதிர்கால திட்டங்கள் தொடர்பில், அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடினார் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# யாழில் காய்ச்சல் காரணமாக இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

நான்கு நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கைதடி மேற்கு, கைதடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நவரத்தினம் தனுசன் (வயது 34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து மறுநாள் 24 ஆம் திகதி முற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று வியாழக்கிழமை (26) பிற்பகல் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரதேச பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.






# 24 மணிநேரத்தில் 7,950 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை: பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட போக்குவரத்து நடவடிக்கைக்கு அமைய நேற்று வியாழக் கிழமை காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதியில் மாத்திரம் 7,950 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துகளை குறைக் கும் நோக்கில் பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக் கமைய கடந்த 20ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் விசேட போக்குவரத்து நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதியில் மாத்திரம் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 395 சாரதிக ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கவனக்குறைவாகவும் அபாயகரமாகவும் வாக னம் செலுத்திய 50 சாரதிகள், அதிக வேகத்தில் வாகனம் செலுத்திய 120 சாரதிகள், விதிமீறல்களில் ஈடுபட்ட 1,262 சாரதிகள், அனுமதிப்பத்திர உரிமைமீறல் தொடர்பில் 682 சாரதிகள் மற்றும் ஏனைய போக்குவரத்து விதிமீறல்களுடன் தொடர்புடைய 5,441 சாரதிகள் உள்ளடங்கலாக 7,950 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக 25 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரத்துக்கு இடைப்பட்ட தொகை யில் தண்டப்பணம் விதிக்கப்படுவதுடன் அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் 12 மாதங்களுக்கு இடைநிறுத்தப்படும்.

மேலும், பொதுப் போக்குவரத்து வாகன சாரதிகள் மேற்படி குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படும் பட்சத்தில் அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

இனிவரும் நாட்களில் மது போதையில் வாகனம் செலுத் தும் சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரத்தை 12 மாதங்க ளுக்கு இடைநிறுத்தல் அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு நீதிமன்றத்தில் பொலிஸார் கோரிக்கை விடுக்க உள்ளார்.

எனவே மது போதையில் வாகனத்தை செலுத்து வதை தவிர்க்குமாறு அனைத்து வாகன சாரதிகளிடமும் கோரிக்கை விடுக்கிறேன்.

மேலும், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மேற்படி விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கை தொடர்ந்து செயற்படுத்தப்படும்.”– என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஜோசப் பரராஜசிங்கம் ஐயா படுகொலை செய்யப்பட்டு 19 வருடங்கள் தாண்டியும் அந்தப் படுகொலைக்கு நீதி கிடைக்கவில்லை. நீதி கிட்ட வேண்டும் என்பது மக்களுடைய ஒரே நிலைப்பாடாக உள்ளது. கடந்த நான்கு வருடங்களில் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இந்தப் படுகொலைகளுக்கு நீதி கிட்டும் என்று நாங்கள் நம்பி இருக்கவில்லை.

ஜோசப் பரராஜசிங்கம் அவர்களது படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த பிள்ளையான், கோட்டாபய ஆட்சிக் காலத்தில் விடுதலை செய்யப்பட்டார். பிள்ளையான் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் அவரது ஊடகப் பேச்சாளராக இருந்த அசாத் மௌலானா வெளிநாடு சென்று பல உண்மைகளை கூறியிருந்தார். அவை சனல் – 4 தொலைக் காட்சியில் ஆவணமாக வெளிவந்தன. அதில், பிள்ளையானை விடுவிப்பதற்காக இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் சிலரை மாற்றினர் எனவும் அப்போது நீதி அமைச்சராக இருந்த அலி சப்ரியின் வழிகாட்டலில் தான் இவை இடம்பெற்றன எனவும் சொல்லப்பட்டது.

இந்த அரசு கடந்த காலத்தில் இடம்பெற்ற பல விடயங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்துவோம் என்று கூறி அதிகாரத்துக்கு வந்தது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மட்டுமல்லாமல் சில முக்கிய வழக்குகளின் உண்மைகளை வெளியே கொண்டு வருவோம் என்று அவர்கள் உறுதி அளித்தார்கள்.

கிழக்கு முன்னாள் துணைவேந்தர் ரவீந்திரநாத்தினுடைய கொலை, திருகோணமலையில் பல்கலைக்கழகம் புக இருந்த மாணவர்கள் ஐவர் கொல்லப்பட்டமை, திருகோணமலையில் கடத்தப்பட்ட 11 பேர் கொல்லப்பட்டமை, பத்திரிகையாளர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டவை போன்ற முக்கிய சம்பவங்கள் குறித்து ஆராய்வதாக அவர்கள் – அரசு – சொல்லி இருந்தனர்.

இதில் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை உள்வாங்கப்படவில்லை.

இந்தப் பேரணியில் வந்த மக்களினுடையகோரிக்கையும்எங்களுடையகோரிக்கையும் இந்த அரசு, தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான்.

இலங்கை சட்டத்துறைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இத்தகைய பல விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள் போன்றவை தொடர்பான உண்மைத் தன்மையை இந்த அரசு வெளிக் கொண்டு வர வேண்டும்.

அப்படியானால் அசாத் மௌலானா சொன்ன விடயங்களை முன்வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். வெறுமனே ஈஸ்டர் குண்டு வெடிப்பு விவகாரம் மாத்திரமில்லாமல் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை பற்றிய விசாரணைகள், அதையொட்டி பிள்ளையான் விடுவிக்கப்பட்டமை, அந்த விடயத்துக்காக நீதிபதிகள் மாற்றப்பட்டனர் என்ற விவகாரங்கள் எல்லாம் அசாத் மௌலானாவின் வாக்குமூலத்தில் உள்ளன.

இந்த விடயங்களை வைத்து குற்றப் புலனாய்வுத் துறையினர் ஜோசப் ராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்து, விவகாரத்தில் சம்பந்தப்பட்ட கலீல் போன்றவர்கள் இன்னும் இருக்கிறார்கள் அவர்களையும் விசாரணை செய்து, மக்களுக்கு அந்த நீதியை வழங்க வேண்டும். ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு மட்டுமல்ல வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற அனைத்துப் படுகொலைகளிற்கும் நீதி கிடைக்க வேண்டும் என நாம் மீண்டும், மீண்டும் வலியுறுத்துகின்றோம். – என்றார்.

மீண்டும் விடயம் கிளறப்பட வாய்ப்புண்டு என்றே தோன்றுகின்றது.

---

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்பு, பூர்த்தி செய்யப்படாத வீட்டுத்திட்டங்களுக்கான விசேட நிதி யீட்டங்களை குறித்த பயனாளிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல், மதுபானசாலைகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தல், வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்தல் மற்றும் வெள்ளப் பாதிப்பினால் சேதமடைந்த வீதிகளின் புனரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் சார்ந்த முன்மொழிவுகள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்குக் கடந்த 20 ஆம் திகதி எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதனடிப்படையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிளிநொச்சி மாவட்ட செயலக வளகம், கலாசார மண்டபம் அமைக்கப்பட்டிருந்த காணி, கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கு உகந்த சந்திரன் பூங்கா இருந்த காணி உள்ளிட்ட நகர்ப்புறக் காணிகள் பலவற்றை இன்றளவும் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். அதேவேளை, நகரின் முதன்மைப் பாடசாலைகளுள் ஒன்றான கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் மைதானத்துக்கான பாதையை விடுவிக்குமாறு கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட சமநேரத்தில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.

441 ஏக்கர் விஸ்தீரணமுடைய வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையின் 410 ஏக்கர் காணி தற்போது வரையில் இராணுவத்தின் வசமுள்ளது. இதனை விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கும் பட்சத்தில் இந்த மாவட்டத்தின் நூற்றுக்கணக்கானோருக்கான வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதால் பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்குரிய காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் வகையில் அமைவிடத்தைக் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுப் பயன்பாட்டு நிறுவனங்களை அண்மித்தும், பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகளை மூடுவதென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதன் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்." – என்றார்.

## திருகோணமலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடல் படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் வழங்கிய தகவலையடுத்து நேற்று வியாழக்கிழமை இந்த விமானம் மீட்கப்பட்டு கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் எரந்த கினகே தெரிவித்தார்.

திருகோணமலை கரையில் இருந்து சுமார் 35 கடல் மைல் தொலைவில் கடலில் இயந்திர படகில் நேற்று அதிகாலை மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது. கடலில் சிறிய ரக விமானம் மிதப்பதை கண்ட மீனவர்கள் அதனை தமது படகில் இணைத்து கொண்ட பின்னர் கடல் படையினருக்கு தகவல் வழங்கினர். இதனையடுத்து, அந்தப் பகுதிக்கு சென்ற கடற்படையினர் விமானத்தை மீட்டு கரைக்கு கொண்டுவந்துள்ளனர்.

இந்த ஆளில்லா விமானம் சுமார் 40 கிலோ எடையுள்ளது ராணாவும் இதுபோன்ற விமானங்கள் இந்திய விமானப்படையின் பயிற்சி அமர்வுகளில் இலக்குகளாகப் பயன்படுத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்த விமானம் சேதமடையவில்லை என்றும்

வெடிபொருள்கள் எவையும் இதில் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த விமானம் தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என விமானப்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

---

## சீனாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவே, அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் தொடர்பில் அந்நாட்டுடன் உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு இந்தியாவுடன் நெருங்கியை தொடர்பைப் பேணும் அதேவேளை ஏனைய நாடுகளுடனும் ஒன்றித்து பயணிக்க வேண்டும்.

இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் அரசு இன்னும் முழுமையாக அறிவிக்கவில்லை. ஒரு சில விடயங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணப்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு முழுமையாக தெளிவுபடுத்த வேண்டும்.

எட்கா ஒப்பந்தத்துக்கு தேசிய மக்கள் சக்தியே கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. அது தொடர்பான பேச்சுகளை தொடர்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. எனவே, எட்கா தொடர்பிலான அநுர அரசின் அணுகுமுறை என்ன? இது பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும்.

அதேவேளை, சர்வதேசத்துடன் இரகசிய ஒப்பந்தங்கள் தேவையில்லை என தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது. ஆகவே, அடுத்த மாதம் சீன செல்லவுள்ள ஜனாதிபதி அங்கு பேசவுள்ள விடயங்களையும் மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்." – என்றார்.




# உத்தேச மின்சாரக் கட்டணத் திருத்தம்; இன்று பொதுமக்கள் கருத்து கோரல்

உத்தேச மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்து கோரல் நடவடிக்கைகள், இன்று முதல் மாகாண மட்டத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, மத்திய மாகாணத்தின் பொதுமக்கள் கருத்து கோரல் நடவடிக்கைகள் கண்டி மாவட்ட செயலக வளாகத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன், ஊவா மாகாணத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதியும், சப்ரகமுவ மாகாணத்தில் ஜனவரி 3ஆம் திகதியும் பொதுமக்கள் கருத்து கோரல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வட மாகாணத்திற்கான பொதுமக்கள் கருத்து கோரல் ஜனவரி மாதம் 6ஆம் திகதி மாவட்டச் செயலாளர் அலுவலகத்திலும் கிழக்கு மாகாணத்திற்கான பொதுமக்கள் கருத்து கோரல் ஜனவரி 8 ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலகத்திலும் இடம்பெறவுள்ளது.

உத்தேச மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் மேல் மாகாணத்திற்கான பொதுமக்கள் கருத்து கோரல் நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.



# சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு 552 மில்லியன் ரூபா நிதி உதவி

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு 552 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் கலைஞர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக இந்த நிதி வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இது தொடர்பான வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நடவடிக்கைகள் இன்று இடம்பெறவுள்ளன.

இந்த நிதியின் மூலம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1,888 வீடுகளையும், கலைஞர்களுக்கு 108 வீடுகளையும் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.




# இறக்குமதி அரிசி விநியோகம் மீண்டும் ஆரம்பமானது!

இறக்குமதி செய்யப்படும் அரிசியை விநியோகிக்கும் பணிகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சுங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அரிசியை விரைவாகத் துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்காக உணவு பரிசோதகர்கள் மற்றும் ஆலை தனிமைப்படுத்தல் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் விசேட முறையொன்றை நடைமுறைப்படுத்தச் சுங்கத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார்த் துறையினர் அரிசியை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட கால அவகாசத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தனியார்த் துறையினருக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த 20ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், இந்த கால அவகாசம் இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

தனியார்த் துறையினர் அரிசியை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைந்து ஆறு நாள்களின் பின்னர் கால நீடிப்பிற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி கால அவகாசம் நிறைவடைந்த கடந்த 20 ஆம் திகதி வரை 67 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைத் தனியார்த் துறையினர் இறக்குமதி செய்திருந்தனர்.

அதில் 38 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் நாடு அரிசியும் அடங்குகின்றன.



# மாலபே நெவில் பெர்ணான்டோ வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்குத் துரித நடவடிக்கை

## நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

மாலபேயில் உள்ள வைத்தியர் நெவில் பெர்ணான்டோ வைத்தியசாலையைத் தரமான வைத்திய சாலையாக உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலைக்கு நேற்று களவிஜயத்தை மேற்கொண்ட பின்னர் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, சுகாதார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் வைத்தியசாலை யொன்றுக்கு மேற்கொண்ட முதலாவது கள விஜயம் இதுவாகும்.

இதன்போது, அமைச்சர் வைத்தியசாலையின் சகல பிரிவுகளையும் பார்வையிட்டதுடன், எதிர்கால திட்டங்கள் தொடர்பில், அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடினார் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணில் - ஹரின் கூட்டின் சாதனை

2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் இரண்டு மில்லியன் (இருபது லட்சம்) சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரியில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டுக்குள் இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்த்தெடுப்பதற்கான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டிருந்தார். அதன் பலனாக தற்போதைக்கு - வருட முடிவுக்கு முன்னர் இந்த எண்ணிக்கையை இலங்கை எட்டியுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டின் பின்னர் வீழ்ச்சியுற்ற சுற்றுலாத்துறையானது கடந்த ஆண்டில் படிப்படியாக வளர்ச்சி பெறத் தொடங்கி, இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டிப் பிடித்துள்ளது.

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு கடனிறுக்க வழியற்ற நாடாக இலங்கை தத்தளித்த போது, தன்னுடைய தேவைக்கு உரிய அத்தியாவசியப் பொருள்களைக் கூட இறக்குமதி செய்ய முடியாத அளவுக்கு அந்நிய செலாவணி கையிருப்பு கரைந்து நட்டாற்றில் தடுமாறியது நாடு.

அந்தச் சமயத்தில் பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டு வரவும், நாட்டில் அந்நிய செலாவணிக் கையிருப்பை உயர்த்தவும் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதே உடனடி வழியென முன்னைய ரணில் அரசு அடையாளம் கண்டது.

அந்தப் பொறுப்பை ரணிலின் அரசில் ஏற்றுக் காத்திரமாக நடவடிக்கை எடுத்தவர் அந்தச் சமயம் அமைச்சராக இருந்த ஹரின் பெர்னாண்டோ.

அவருடைய நிர்வாகம் தொடர்பில் வேறு பல குற்றச்சாட்டுகள், நெருக்கடிகள், பின்னடைவுகள் கூறப்பட்டாலும் சுற்றுலாப் பயணிகளை பெரும் எண்ணிக்கையில் நாட்டுக்குள் வரப் பண்ணுவதே அந்நிய செலாவணிக் கையிருப்பை உயர்த்துவதற்கான பிரதான மார்க்கம் என்று கருதி பல திட்டங்களை அதனடிப்படையில் முன் வைத்தார் ஹரின்.

இந்த ஆண்டின் முடிவுக்குள் இருபது லட்சம் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் வரப் பண்ணும் விதத்தில் கவர்ச்சிகரமான ஏற்பாடுகளை செய்வதுடன் அடுத்த ஆண்டில் அந்த எண்ணிக்கையை 25லட்சமாக உயர்த்த வேண்டும் என்றும் அவர் திட்டமிட்டு அறிவித்தார்.

இந்த ஆண்டில் நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும், அதனால் அமைச்சர் பதவியை அவர் இழந்த போதிலும் அவர் திட்டமிட்டபடி இலக்கு எட்டப்பட்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டல், கொள்கை ரீதியான தீர்மானம், அமைச்சராக இருந்த ஹரின் பெர்னாண்டோவின் பாராட்டத்தக்க செயற்பாடுகள் போன்றவையே இந்த இலக்கை இலங்கை அடைவதற்குரிய முக்கிய காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

"2024 இல் நாங்கள் கணித்தது உண்மையாகிவிட்டது, கடின உழைப்பு பலனளித்தது. நாங்கள் பூஜ்ஜிய சுற்றுலாப் பயணிகளுடன் ஆரம்பித்தோம். வரையறுக்கப்பட்ட விமான நிறுவனங்கள் இலங்கைக்கு சேவை நடத்திய நிலையில் 709,000 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் 2022 முடிவடைந்தது. 2023 இல் கணிக்கப்பட்ட இலக்கு ஒன்றரை மில்லியன் சுற்றுலாப் பயணிகளாக இருந்தது. 1,489,000 பயணிகளின் வருகையைப் பெற்றோம். 2024 இல் 2 மில்லியன் இலக்கை எட்டியுள்ளோம்" - என்று ஹரின் பெர்னாண்டோ கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் ஹரின் பெர்னாண்டோ மேற்கொண்ட திட்டமிட்ட முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி இது என்று கூறுவதில் தப்பில்லை.



# இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் காலமானார்

முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான மன்மோகன் சிங், உடல் நலக்குறைவால் நேற்று காலமானார்.

புகழ்பெற்ற பொருளாதார நிபுணரும் அரசியல்வாதியுமான மன்மோகன் சிங்கின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து நேற்று மாலை டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சமீப காலமாகவே உடல்நலக்குறைவு காரணமாக, மன்மோகன் சிங் அரசியலிலிருந்து ஒதுங்கி இருந்தார்.

2024ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து உடல்நிலை அடிக்கடி சரியில்லாமல் போனது.

ஏப்ரல் 2024 இல் ராஜ்யசபா உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

மன்மோகன் சிங் 2004 முதல் 2014 வரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் பிரதமராக இருந்தார்.

தொடர்ந்து இரண்டு முறை பிரதமராகப் பணியாற்றி மன்மோகன் சிங், அதற்கு முன்பு 1991ஆம் ஆண்டு பிவி நரசிம்ம ராவ் அரசில் நிதி அமைச்சராகப் இருந்தார்.

அப்போது அவருடைய செயல்பாடுகள் காரணமாக இந்தியாவின் பொருளாதாரத்தின் சிற்பிகளில் ஒருவராகப் போற்றப்படுகிறார்.



# பாதிப்படைந்த பயிர்நிலங்களை பரிசோதிக்கும் நடவடிக்கை தீவிரம்

கடந்த மாதம் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் சுமார் 80,000 ஏக்கர் பயிர் நிலங்கள் பாதிப்படைந்துள்ளன என இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆய்வில் தெரியவந்துள்ளது.

விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதி சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சேதமடைந்துள்ள பயிர் நிலங்களை ஆய்வு செய்யும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அந்த சபை தெரிவித்துள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர் சேதங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன.

இந்த மாவட்டங்களுக்கான இறுதி அறிக்கைகள் கிடைத்த பின்னர் இழப்பீடு வழங்கப்படும் என விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம், குருநாகல் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் பயிர்நிலங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதி சபை அறிவித்துள்ளது.




# வாகனப் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு விசேட ஆலோசனைகள்

வாகனப் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இரவு வேளைகளில் வாகனங்களை நிறுத்தும்போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபரால் விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய மேற்படி வாகனப் போக்குவரத்து அதிகாரியின் உருவம் சாரதிகளுக்கு தெரியக்கூடிய வகையில் ஒளியைப் பிரதிபலிக்கும் ஒளிரும் மேலங்கி மற்றும் ஒளிரும் கையுறை கையுறை ஆகியவற்றை அவர் அணிந்திருக்க வேண்டும்.

அத்துடன், வாகனங்களை நிறுத்துவதற்காக பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிவப்பு நிற மின்விளக்குகளையே முடிந்தவரையில் பயன்படுத்த வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இரவுநேரக் கடமையில் ஈடுபடுத்தப்படும் அதிகாரிகள் அவ்வாறு செயற்படுகிறார்களா என்பது தொடர்பில் தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் போக்குவரத்து பொறுப்பதிகாரிகளால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டுமெனவும் பதில் பொலிஸ் மாஅதிபரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வாகனப் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இரவு வேளைகளில் வாகனங்களை நிறுத்தும்போது பல சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான மின்விளக்குகளை பயன்படுத்துகின்றமையால் அவை சாரதிகளுக்கு இடையூறை ஏற்படுத்துகின்றமை காரணமாக அவர்களுக்கு வாகனத்தை கையாளவும் கட்டுப்படுத்தவும் கடினமாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக விபத்துகள் இடம்பெறும் வாய்ப்பு காணப்படுவதாகவும் ஒளியைப் பிரதிபலிக்கும் மேலங்கியை அணியாமையால் அதிகாரிகள் விபத்திற்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளமையால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களுக்கு நாட்டின் வைத்தியசாலைகளில் பற்றாக்குறை

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

40 வீதத்திற்கும் அதிகமான அதிகாரிகளுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக அதன் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தால் அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களை சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டதாக அவர் கூறினார்.

இதன் காரணமாக நோயாளர்களின் சிகிச்சை மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன என அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் 80 இற்கும் அதிகமான கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதுடன், 41 உயர் டிப்ளோமாதாரிகள் தற்போது தொழில்வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் என அவர் கூறினார்.

தற்போது 620 கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சேவையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அண்ணா பல்கலை துஸ்பிரயோக விவகாரம்; போராட்டம் நடத்திய பா.ஜ.கவினர் கைது



அண்ணா பல்கலைக்கழக மாணவி துஸ்பிரயோக சம்பவத்தைக் கண்டித்து வள்ளுவர் கோட்டத்தில் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் உள்ளிட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

முன்னதாக, அண்ணா பல்கலைக் கழக மாணவிதுஸ்பிரயோக சம்பவத்தைக் கண்டித்தும் மாணவிக்கு நீதி கேட்டும் வள்ளுவர் கோட்டம் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று பா.ஜ.க. அறிவித்திருந்தது.

இந்நிலையில், நேற்று காலை முதலே அப்பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் பொலிஸாரின் தடையை மீறி நடைபெறுவதால், போராட்டத்தில் பங்கேற்க வந்த பா.ஜ.கவினரை பொலிஸார், கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால், பா.ஜ.கவினருக்கும், பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது போராட்டத்தில் ஈடுபடுவதற்காக, பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் வள்ளுவர் கோட்டம் பகுதிக்கு வந்தார். அவரை தடுத்து நிறுத்திய பொலிஸார் அவரை கைது செய்தனர்.

மேலும், இந்த போராட்டத்தில் ஈடுபட வந்த அக்கட்சியின் கரு.நாகராஜன் உள்பட 30 இற்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை பொலிஸார் கைது செய்து, அருகில் உள்ள தனியார் மண்டபத்தில் அடைக்கப்பட்டனர்.

முன்னதாக கைது செய்யப்பட்ட பா.ஜ.கவினர், பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கேட்டும், தமிழக அரசு மற்றும் பொலிஸாரை கண்டித்தும் கண்டன கோஷங்களை எழுப்பினர்.

# பிஹாரில் மாணவர்களின் போராட்டத்தில் தடியடி

## ராகுல், பிரியங்கா கண்டனம்

வினாத்தாள் கசிவு விவகாரத்தில் பிஹார் அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு எதிராக போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதற்கு மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ராகுல் காந்தி வெளியிட்ட எக்ஸ் பதிவில், “ஏகலைவனின் கட்டைவிரல் துண்டிக்கப்பட்டதைப் போலவே வினாத்தாள் கசிவுகளால் வேலைவாய்ப்பை தேடும் இளைஞர்களின் கட்டைவிரல்கள் வெட்டப்படுகின்றன என்று நாடாளுமன்றத்தில் நான் ஏற்கெனவே பேசியிருந்தேன். இதற்கு சமீபத்திய சிறந்த உதாரணம் பிஹார் அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டம்.

வினாத்தாள் கசிவுக்கு எதிராகவும், தேர்வை ரத்து செய்ய கோரியும் மாணவர்கள் குரல் எழுப்புகின்றனர். ஆனால், தோல்வியை மூடிமறைக்க தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மாணவர்கள் மீது தடியடி நடத்துகிறது.

இது மிகவும் வெட்கக்கேடான செயல் மட்டுமின்றி வன்மையாக கண்டிக்கத்தக்கது. மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடுவதை பொறுத்துக் கொள்ள முடியாது. நாங்கள் அவர்களுடன் இருக்கிறோம். நீதி கிடைக்க போராடுவோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# உயிரிழந்த பெண்ணின் குடும்பத்துக்கு ‘புஷ்பா’ படக்குழுவினர் நிதியுதவி



ஹைதராபாத்தில் கூட்ட நெரிசலில் பெண் உயிரிழந்தசம்பவத்தைதொடர்ந்து, அவரது குடும்பத்தினருக்கு ‘புஷ்பா-2’ பட குழு சார்பில் 2 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நடிகர் அல்லு அர்ஜுன் நடித்த ‘புஷ்பா 2’ திரைப் படத்தின் சிறப்பு காட்சி ஹைதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கில் கடந்த 4ஆம் திகதி இரவு திரையிடப்பட்டது. சிறப்பு காட்சியை காண நடிகர் அல்லு அர்ஜுன் சென்றார். அவரை பார்க்க ரசிகர்கள் கூட்டம் அலைமோதியதால், அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் நெரிசலில் சிக்கி ஹைதராபாத்தை சேர்ந்த பாஸ்கர் ரேவதி (வயது 35) உயிரிழந்தார். இவரது மகன் ஸ்ரீதேஜ் (வயது 9) படுகாயம் அடைந்தார். மருத்துவமனையில் ஸ்ரீதேஜ் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுதொடர்பாக நடிகர் அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், அல்லு அர்ஜுனின் தந்தையும், தயாரிப்பாளருமான அல்லு அரவிந்த் நேற்றுமுன்தினம் ஸ்ரீதேஜ் சிகிச்சை பெற்று வரும் ஹைதராபாத் கிம்ஸ் மருத்துவமனைக்கு சென்று நலம் விசாரித்தார். ஸ்ரீதேஜின் தந்தை பாஸ்கருக்கு ஆறுதல் கூறினார்.

திரைப்பட வளர்ச்சிகழக தலைவர் தில்ராஜு உள்ளிட்டோர் உடன் இருந்தனர். அப்போது, அல்லு அர்ஜுன் தரப்பில் 1 கோடி ரூபா, புஷ்பா திரைப்பட இயக்குநர் சுகுமார் சார்பில் 50 லட்சம் ரூபா, தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவிஸ் சார்பில் 50 லட்சம் ரூபா என 2 கோடி ரூபாவுக்கான காசோலையை பாஸ்கரிடம் வழங்கினர்.



# சிரிய முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் 14 பேர் கொலை

சிரியாவில் இடம்பெற்ற மோதலில் முன்னாள் ஜனாதிபதி அசாத்தின் ஆதரவாளர்கள் 14 பேர் கொல்லப்பட்டனர்.

வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி அல் அசாத்தின் புதிய கிளர்ச்சியாளர்கள் தலைமையிலான ஆதரவாளர்கள் நாட்டின் மேற்கு பகுதியில் பதுங்கி இருந்து இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த மோதலில் மனித உரிமைகளுக்கான சிரியா கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் மூவரும் உயிரிழந்துள்ளனர்.

இதே போன்று கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற தாக்குதலிலும் 10 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.





# தென் கொரிய தற்காலிக ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை

தென் கொரியாவின் பிரதமரும் தற்காலிக ஜனாதிபதியுமான ஹான் டக்-சூவை பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானத்தை தென் கொரியாவின் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்று தாக்கல் செய்துள்ளனர்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியால் பரிந்துரைக்கப்பட்ட அரசமைப்பு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க ஹான் டக்-சூ மறுத்ததை அடுத்து பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானத்தை அவர்கள் தாக்கல் செய்தனர்.

டிசம்பர் 3 அன்று குற்றம் சாட்டப்பட்டு, பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் இயோலின் இராணுவச் சட்ட முயற்சிக்கு ஹான் உதவினார் என எதிர்க்கட்சியும் குற்றம் சாட்டியுள்ளது.



ஹான் முன்னதாக அதைத் தடுக்கத் தவறியதற்காக மன்னிப்புக் கோரியிருந்தார்.

இந்த நிலையில் ஹான் டக்-சூவின் பதவி நீக்க தீர்மானம் அடுத்த 24 முதல் 72 மணி நேரத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அது வெற்றிபெற 300 எம்.பி.க்களில் 151 பேர் வாக்களிக்க வேண்டும்.

தற்போது நாடாளுமன்றத்தில் உள்ள 300 இடங்களில் 170 இடங்களை ஜனநாயகக் கட்சி கொண்டுள்ளது. எதிர்க்கட்சி கூட்டணி 192 இடங்களைக் கொண்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 27.12.2024




இன்று வெற்றிகரமான நாள் என்பதால் இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் அதிகமாக காணப்படும்.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் ஆற்றுவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை உங்களை வெற்றியின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும், உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் இருந்து கொண்டே இருக்கும். கையில் இருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் பணிகளை சுமூகமாக மேற்கொள்வீர்கள். இன்றைய முக்கியமான நடவடிக்கைகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டைப் பெறும்.உங்கள் பணிகளை உறுதியுடன் ஆற்றுவீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




ஆன்மீகத்துக்கு நேரம் ஒதுக்குங்கள். அதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகளைத் திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. கூடுதல் செலவுகள் ஏற்படும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் இன்று அது உங்களுக்கு மிகவும் கடினம்.

இன்று பணியில் அவ்வளவாக முனேற்றம் காணப்படாது. கூடுதல் பணிகளை செய்ய நேரும். பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது.வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் தைரியமான போக்கின் காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.

பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். பயணங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் உங்களுக்கு திருப்திகரமானதாக இருக்கும். முதலீடு மற்றும் சேமிப்பதற்கான ஆற்றல் காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்ச் சிகரமான நாளாக இருக்காது. உங்கள் நம்பிக்கை மற்றும் லட்சியங்களை உணர நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியது அவசியம்.

சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படும். பணிகளை பொறுமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. வீட்டில் இருக்கும் பெரியவர்களின் உடல் நலத்துக்காக செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

பணியில் சிறந்த பலன் பெற கவனமாக பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்காது. பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று யதார்த்த அணுகுமுறை மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இது வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அமைதியாக இருப்பதன் மூலம் நல்ல பலனைக் காணலாம்.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியிடத்தில் மாறுதல்களுக்கேற்ப பணி செய்ய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். வரவும் செலவும் சமமாக காணப்படும். நிதி சம்பந்தமான முடிவுகளை இன்று எடுப்பது உசிதமல்ல.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.12.2024




தொடர் முயற்சியின் மூலம் இன்று அனைத்திலும் வெற்றி காணலாம். நேர்மறையான எண்ணங்களை பராமரிப்பதன் மூலம் நல்ல அதிர்ஷ்டத்தைக் காணலாம்.

பணி நிமித்தமான பயணம் ஏற்படலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும். வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

அதிக பணவரவுக்கான வாய்ப்பு உள்ளது. ஆன்மீக காரியங்களுக்கு பணத்தை பயன்படுத்துவது சிறந்த பலனை அளிக்கும்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும்.




உங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள். இன்று தேவையற்ற எண்ணங்களை தவிர்ப்பது நல்லது.

பணியில் கவனம் தேவை. பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக தவறுகள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக இன்று பண இழப்புகள் ஏற்படலாம். தேவையற்ற செலவும் இன்று ஏற்படலாம்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்படலாம்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்தியம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் கானபப்படும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதற்றம் ஏற்படலாம்.




